# பதின்ம வயதினர் மற்றும் மரியுவானா பற்றிய உண்மைகள்

## இதோ சில நல்ல (வியப்பூட்டும்) செய்திகள்: மரியுவானா மற்றும் பிற போதைப்பொருள் பயன்பாடு பற்றிய சரியான தகவல்கள் தேவைப்பட்டால், பதின்ம வயதினர் தங்கள் வாழ்க்கையில் தமது பெற்றோரையும் நம்பிக்கைக்கு உரிய பெரியவர்களையும் அணுகுகிறார்கள்.

இன்னும் கொஞ்சம் நல்ல தகவல்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது: **பதின்ம வயதினருடன் பேசுவது பயன் தருகிறது என்பதை நாம் அறிவோம்**. காரில், அல்லது இரவு உணவு அருந்தும்போது அல்லது வெளியே ஒரு நடை போகும்போது, மரியுவானா பயன்பாடு குறித்து உங்கள் பதின்ம வயதினருடன் நீங்கள் உரையாடினால், அவர்கள் கவனிப்பார்கள்.

அவர்களிடம் கேள்விகள் இருக்கும், உங்களிடம் அதற்கான பதில்கள் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அனுபவத்தின் மூலம் அறிவீர்கள்.

### அப்படியென்றால்... மரியுவானா பதின்ம வயதினரை எவ்வாறு பாதிக்கிறது?

1. மரியுவானா பயன்படுத்துவதால் அவர்களுடைய கல்வித் தரம் பாதிக்கப்படலாம். சிறுவயதிலேயே மரியுவானா பயன்படுத்துவதால் மூளை வளரும் முறையை பாதிக்கலாம், நினைவுத் திறன், கற்றல், அறிவுத்திறன் ஆகியவற்றின் மீது நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

2. மரியுவானா பெரியவர்களை விட சிறியவர்களை அதிகம் அடிமை ஆக்கக்கூடியது. வாஷிங்டன் மாகாணத்தில் போதைப் பழக்கச் சிகிச்சைக்கு வரும் பதின்ம வயதினரில் பெரும்பாலோர் மரியுவானாதான் முக்கிய போதைப் பொருளாகப் பயன்படுத்தியதாகச் சொல்கிறார்கள்.

3. மரியுவானாவைப் பயன்படுத்துவது, குறிப்பாக மற்ற போதைப் பொருட்களுடன் கலக்கும்போது, ஒத்திசைவு மற்றும் எதிர்வினைக்கான நேரத்தை பாதிக்கலாம், வாஷிங்டன் மாநிலத்தில் உயிரைப் பறிக்கக்கூடிய ஆபத்தான விபத்துகள் அதிகரிப்பதற்கும் இதற்கும் தொடர்பு உண்டு.

4. மரியுவானாவைப் பயன்படுத்துவது கணிக்க முடியாத நடத்தை மற்றும் மோசமான முடிவெடுப்பதற்கு வழிவகுக்கலாம், இதன்மூலம் பயன்படுத்தியவருக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு ஏற்படலாம்.

5. 21 வயதிற்குட்பட்டவர்கள் மரியுவானா பயன்படுத்துவது சட்டத்திற்கு எதிரானதாகும். இந்தச் சட்டம் பெரும்பாலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை, மரிஜுவானா பயன்பாட்டைத் தவிர்ப்பது, சட்ட அமலாக்க மற்றும் குற்றவியல் சட்ட அமைப்புகளை எதிர்கொள்வதிலிருந்து பதின்ம வயதினரைப் பாதுகாக்கும். பிடிபடுவது மற்றும் அதனால் ஏற்படும் களங்கம் எதிர்காலத்தில் ஒரு வேலையைப் பெறுவதற்கான அல்லது கல்லூரிப் படிப்புக்கு நிதி உதவி பெறும் வாய்ப்பைப் பாதிக்கலாம்.



இப்போது நீங்கள் உண்மைகளை அறிந்துகொண்டீர்கள், **எனவே மரியுவானா பயன்பாட்டினால் விளையக்கூடிய தீமைகளைப் பற்றி உங்கள் பதின்ம வயதினருடன் பேசுங்கள்.** உங்கள் விதிகள், எதிர்பார்ப்புகள் குறித்து தெளிவாக இருங்கள். அவர்களுக்குத் துணையாக நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறியச் செய்யுங்கள்.

கூடுதல் தகவல்களுக்கும், உண்மைகளைப் பற்றி மேலும் அறியவும், இந்த வலைதளத்தைப் பார்க்கவும் - **StartTalkingNow.org**. ஆரோக்கியமான தேர்வுகள் குறித்து உங்கள் பதின்ம வயதினர் மேலும் அறிய விரும்பினால், இங்கே பார்க்கலாம் - **YouCanWA.org**.

உங்கள் பதின்ம வயதினர் தமது சக வயதினருடன் பேசுவது வசதியாக இருக்கும் என்று நினைத்தால், பயிற்சி பெற்ற இளைஞர்களைக் கொண்ட, ரகசியம் காக்கும் இலவச உதவிச் சேவை ஒன்று உண்டு. உங்கள் பதின்ம வயதினரை **1-866-TEENLINK (833-6546)** என்ற எண்ணுக்கு அழைக்க, குறுஞ்செய்தி அனுப்ப, அல்லது உரையாட ஊக்குவிக்கவும்.

மரியுவானா அல்லது இதர போதைப் பொருட்களின் பயன்பாட்டுப் பழக்கத்தால் உங்கள் பதின்ம வயதினர் போராடிக் கொண்டிருப்பதாக நீங்கள் நினைத்தால், அவர்களுடைய மருத்துவரை அல்லது இதனை அழைக்கவும் - **Washington Recovery Help Line 1-866-789-1511**.